**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.132/2019**

பெயர்–திரு.சத்திவேல் நாள்.28.01.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**1)** வாதி முருகேசன், தண்டபாணி எனக்கு எதிராக 43 செண்ட் கிரையம் பெற்றதை ரத்து செய்யக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 1–ம் வாதி முருகேசனை எனக்கு எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும், தண்டபாணியை எனக்கு தெரியாது. கிரையத்தின் போதுதான் தெரியும். தாவா சொத்து 11.02.2008–ம் தேதியன்று 1–ம் வாதிக்கும், 21.07.2014–ம் தேதி கிரையப் படி 2–ம் வாதிக்கும் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். இரண்டு மூல ஆவணங்களையும் பார்த்துள்ளேன். என் வசம் உள்ளது. மேற்படி இரண்டு அசல் மூல ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியும். தாவா சொத்தை யார் மூலமாக கிரையம் பெற்றேன் என்றால், வாதிகளிடம் நான் நேரடியாக கிரையம் பெற்றேன். இதை எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், ஞாபகம் இல்லை. எதிர் வழக்குரையை பார்த்து மேற்படி விவரத்தை கூற முடியுமா என்றால், முடியும். சாட்சி எதிர்வழக்குரையை பார்த்துவிட்டு, வாதிகளை நேரடியாக அணுகி கிரையம் பெற்றதாக குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பாத்தேனா என்றால், பார்த்தேன். மூல ஆவணங்களை பார்த்தேனா என்றால், பார்த்தேன். மூல ஆவணம் சரியாக இருந்தது. 30.05.2019 ம் தேதியன்று வாதிகள் எனக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தில் உள்ள சாட்சிகள் கண்ணதாசன் மற்றும் சதீஷ் ஆகியோர்களை எனக்கு 15 ஆண்டுகளாக தெரியும். கிரையம் ஏற்படுத்தும்போது, இரு சாட்சிகளும் என்னுடன் இருந்தார்கள் என்றால், சரிதான்.

**2)** மேற்படி கிரையத்தின் போது என்ன நடந்தது என சாட்சிகள் இருவருக்கும் தெரியும். மேற்படி கிரையப் பத்திரத்தில் ரூ.73,000/–க்கு காசோலை கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். காசோலையை இரண்டு வாதிகளும் பிரித்துக் கொள்ள முடியாது என கூறி, பணமாக வேண்டுமென கேட்டு வாங்கிக் கொண்டார்கள். மேற்படி பணமாக பெற்ற

விவரத்தை கிரைய பத்திரத்தில் கூறவில்லை என்றால், சரிதான். மேற்படி விவரங்கள் பற்றி எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன். காசோலையானது IDBI வங்கிக்கான காசோலை எண்.114210 என்றால், சரிதான். ரூ.73,000/—ஐ பணமாக கொடுக்கும்போது இரு சாட்சிகளும் இருந்தார்கள்.பணத்தை வாங்கிக் கொண்டு வாதிகள் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என வாதிகள் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. வழக்கில் ஆஜராகி நடத்துகிறேன். நான் சொல்வது போல் காசோலையும் கொடுக்கவில்லை, பணமும் கொடுக்கவில்லை அதனால்தான் வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். நான் பணமாக கொடுத்த ரூ.73,000/—க்கு ரசீது எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. கிரையப் பத்திரத்தில் இருநாள் வரையிலும், காசோலை கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து போக, மீதமுள்ள சொத்து சம்மந்தமாக கடந்த 09.07.2021 தேதியில் நானும், 1—ம் வாதியும் ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால், இல்லை. மேற்படி ஒப்பந்தப்படி ரூ.6/—லட்சத்திற்கு மூன்று DD யாக எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும், எனது மகன் ரகுவந்தன் பெயரிலும் தலா ரூ.2/—லட்சம் வீதம் வாங்கிக்கொண்டோம் என்றால், சரிதான். ஆனால், நான் 1—ம் வாதியிடம் கொடுத்த வேறு பண பரிமாற்றத்திற்காக மேற்படி ரூ6/—லட்சத்தினை வாங்கியுள்ளேன். தாவா சொத்திற்கும் மேற்படி தொகைக்கும் சம்மந்தம் இல்லை. என்னிடம் காட்டப்படும் சமரச ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால், இல்லை.

3) மாண்பமை கோபிசெட்டிபாளையம் சார்பு நீதிமன்றத்தில் ரூ.6/— லட்சத்தை வாங்கிக்கொண்டு கிரையம் செய்து கொடுக்கவில்லை என என் மீதும், எனது மனைவி மீதும் 1—ம் வாதி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் 09.07.2021—ல் நான் செய்து கொடுத்த ஒப்பந்தப்படி நான் நடக்கவில்லை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் எனக்கு எப்போது சம்மன் வந்தது என்றால், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் வந்தது. நான் மேற்படி வழக்கிலும் எதிர் வழக்காடி வருகிறேன் என்றால், சரிதான். மேற்படி வழக்குப் பற்றி 2 ஆண்டுகளில் நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால், சரிதான். நான் ரூ.73,000/—க் IDBI வங்கியில் காசோலை கொடுப்பதாக கூறிவிட்டு, காசோலையும் கொடுக்காமல், பணமும் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டேன் என்றால், சரியல்ல. பணத்தை வாங்கிக்கொண்டுதான் கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்தார்கள். நான் பணம் கொடுக்காமல், 43 சென்ட்டை ஏமாற்றி கிரையம் பெற்றுவிட்டேன் என்றால், சரியல்ல. அ.வ.எண்.43/2025 வழக்கிலும் ரூ.6/— லட்சத்தை வாங்கிக்கொண்டு சொத்தை கிரையம் செய்து கொடுக்காமல்

ஏமாற்றி விட்டேன் என்றால், சரியல்ல. நான் ஏமாற்றி கிரையம் பெற்றதால், எனது ஆவணம் செல்லாதது என்றால், சரியல்ல. பணம் பரிக்க வேண்டி வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.01.28 17:32:38 +0530

District Munsif